| அசல் வழக்கு எண்.121/2022 | | பி. சா .1 | தேதி.10.04.2023 |
|---|---|---|---|
| பெயர் | திரு.கே. நடராஜ் | வயது | 53 |
| த/பெ. | திரு. லேட். கருப்புசாமி | முகவரி | 47-ஏ, ஸ்ரீரங்கராயன் ஓடை, மேட்டுப்பாளையம் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது

முதல் விசாரணை தொடர்ச்சி

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்து மூலமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.

| | | |
|---|---|---|
| பி சா ஆ.1 | | வாரிசுகள் விபர பட்டியல் அட்டவணை |
| பி சா ஆ. 2 | | அய்யாகுட்டியின் வாரிசுகளை காட்டும் அட்டவணை |
| பி சா ஆ.3 | 13.10.2015 | ராமனின் இறப்பு சான்றிதழ் |
| பி சா ஆ.4 | 15.12.2015 | குப்பம்மாளின் இறப்பு சான்றிதழ் |
| பி சா ஆ.5 | 23.12.2021 | குப்பம்மாளின் வாரிசு சான்றிதழ் |
| பி சா ஆ.6 | 8.5.2015 | பட்டா எண். 1041 க்குரிய பட்டா |

குறுக்கு விசாரணை

1. கந்தன் என் தாய்மாமா. சரசம்மாள் என் அம்மாவின் தங்கை, பாலுசாமி என் தம்பி. இந்திராணி என் தங்கை. அய்யாகுட்டிக்கு இரண்டு மனைவிகள். அய்யாகுட்டியின் முதல் மனைவியின் பெயர் சின்னம்மாள். இரண்டாம் மனைவியின் பெயர் ராமாள். முதல்மனைவி சின்னம்மாளுக்கு ஒரே ஒரு மகன். அவர் பெயர் ராமன். இரண்டாம் மனைவி ராமாளுக்கு 5 பிள்ளைகள். அவர்களில் 3 பேர் பெண் பிள்ளைகள். 2 பேர் ஆண் பிள்ளைகள். முதல் மகன் பெயர் சின்ன மாறன். 2 வது மகன் பெயர் சுப்பன். 3-வது பிள்ளையின் பெயர் ஜயம்மாள். 4-வது பிள்ளையின் பெயர் நாச்சம்மாள். 5-வது பிள்ளையின் பெயர் மாராள். வழக்குச் சொத்துக்களின் புல எண்கள் எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு அவ்வளவா இல்லை. வழக்குச் சொத்துக்களின் பரப்பளவு எவ்வளவு என்றால் 6 ஏக்கர் ஆகும்.

2. 6 ஏக்கர் பூமி எங்கள் குடும்பத்திற்கு எப்படி வந்ததென்றால் என் தாத்தாவின் அப்பா அய்யாக்குட்டியின் வழியாக வந்த சொத்துக்கள் ஆகும். அய்யா குட்டியின் வாரிசுகளுக்கு அந்த பூமி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களின் பட்டாவை நான் பார்த்ததில்லை. பட்டாவில் சொத்துக்கள் யார் யார் பெயரில் உள்ளது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பட்டாவில் ராமன்,

சின்னம்மா, ராமாள், சுப்பன், ஆகியோர் பெயர் உள்ளது. சின்னமாறன் பெயர் அதில் உள்ளது என்றால் சின்னமாறன் பெயர் அதில் இல்லை. நானும் இந்திராணியும், கந்தசாமியும், பாலுச்சாமியும் யாருக்கு கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் யாருக்கென தற்பொழுது பெயர் எனக்கு ஞாபகம் இல்லை.

3. அந்த விலையாவணம்தான் வா சா ஆ 25 என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்துக்களானது அய்யாக்குட்டியிடமிருந்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அய்யாகுட்டி ராமனுக்கு சொத்தை கொடுத்துள்ளதாகவும் ராமனின் வாரிசுகள் என விற்பனை செய்துள்ளதாகவும் அதில் சொல்லி உள்ளோம். அய்யாக்குட்டி ராமனுக்கு எந்தவகையில் சொத்தை கொடுத்துள்ளார் என்றால் எந்த வகையிலும் கொடுக்கவில்லை. சொத்தில் பாகம் இருந்ததால் அதன் அடிப்படையில் கொடுத்துள்ளார். 1985 ல் பழனிச்சாமி மனைவி மாராத்தாளுக்கு ஒரு சொத்தை விற்பனை செய்தோமா என்றால் அப்பொழுது எனக்கு சின்ன வயசு அதனால் எனக்கு அந்த விபரம் தெரியாது.

4. அந்த சமயத்தில் என் தாயார் குப்பம்மாள் உயிருடன்தான் இருந்தார் என்றால் சரிதான். என் தாயார் குப்பம்மாளுக்கு குடும்பத்தை பற்றிய விபரமும் சொத்துக்கள் பற்றிய விபரமும் தெரியும் என்றால் சரிதான். வா சா ஆ 3 ஆவணத்தில் அய்யாக்குட்டியின் மனைவி பெயர் ராமாள் என சொல்லப்பட்டுள்ளதென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட பத்திரம் குறித்து யாரிடமாவது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இப்போதுதான் அந்த பத்திரம் குறித்தே எனக்கு தெரியும். வா சா ஆ 3 கிரைய பத்திரம் குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது. இந்த வழக்கில் வெள்ளிங்கிரி வகையறா என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்து என்னென்ன பரிகாரங்கள் கேட்டுள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அது குறித்து எனக்கு எதுவுமே தெரியாது.

5. யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் வெள்ளிங்கிரியின் அக்கா சகோதரிகள் வழக்கு போட்டுள்ளார்கள். இந்த வழக்கில் என்ன பதில் போட்டுள்ளேன் என்றால் சுப்பன் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லையென பதில் போட்டுள்ளேன். இந்த வழக்கில் எனக்கு சம்மன் வந்த பிறகு யார் யாரெல்லாம் வக்கீலை பார்க்க போனோம் என்றால் நானும் என் தம்பி பாலுச்சாமியும் போனோம். கந்தன் எங்களுடன் வரவில்லை. சரசம்மாள் வந்திருந்தார். கந்தன் ரொம்ப சீரியசாக இருக்கிறார். அவர் 3 வருடமாக சிரியசாக உள்ளார். 3 வருடமாக அவரால் பேச முடியாது. பேசினாலும் புரியாது. நாங்கள் சொன்னால் அவர் புரிந்து கொள்வார். அவருக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கில் கந்தனும் எங்களுடன் சேர்ந்துதான் பதில் போட்டுள்ளார் என்றால் ஆமாம்.

6. இந்த வழக்கிற்கு முன்பாக இதே சொத்து குறித்து ஏற்கனவே இரண்டு வழக்குகள் போடப்பட்டிருந்தன என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கும் என் சகோதரர சகோதரிகளுக்கும் அந்த வழக்குகள் குறித்து தெரியுமா என்றால் அவர்களுக்கும் தெரியாது.

அந்த வழக்குகள் பற்றிய விபரம் யாருக்கு தெரியும் என்றால் எங்களுக்கு தெரியாது. சரசம்மாளை கேட்டுப்பார்த்தால்தான் அவருக்கு தெரியுமா இல்லையா என்பது தெரியும். இரண்டு வழக்குகள் இருக்கும் விபரத்தை எங்கள் வக்கீலிடம் நாங்கள் சொல்லவில்லை. பதிலுரையில் என்ன சொல்லப்பட்டுள்ளதென எங்கள் வக்கீலிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டோம். எங்களது பதிலுரையிலும் எனது முதல் விசாரணையிலும் என்ன சொல்லப்பட்டுள்ளதென்பது எங்கள் வக்கீல் சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். வெள்ளிங்கிரி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நாங்கள் நகல் எடுத்து பார்த்தோமா என்றால் இல்லை.

7. எனது வக்கீல் நகல் எடுத்து பார்த்தாரா என்றால் அவர் எடுத்திருப்பார். என் வக்கீல் என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரத்தை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சின்னம்மாளுக்கு யாரெல்லாம் வாரிசு என்பதற்குரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லையென்றால் எங்கள் வக்கீலிடம் கொடுத்துள்ளேன். அய்யாக்குட்டிக்கும் மாராளுக்கும் திருமணம் நடந்த விபரம் எனக்கு தெரியாது. அவர்களுக்கும் எங்களுக்கும் போக்குவரத்து இல்லை. பி சா ஆ. 6 பட்டாவில் அய்யாக்குட்டி முத்து மக்கள் ராமன், சின்னம்மாள், மைனர் சுப்பன், ராமாள், என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் அந்த ஆவணத்தையே நான் பார்த்ததேயில்லை. ( பி சா ஆ 6 பட்டா சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு கேள்வி எழுப்பட்டபோது சாட்சி மேற்கண்டவாறு பதில் அளித்தார்).

8. சின்னம்மாளுக்கும் அய்யாகுட்டிக்கும் திருமணம் நடந்த விபரம் எனக்கு தெரியாது. வழக்கை பற்றி விபரங்களும் வழக்கு சொத்து குறித்த விபரங்களும் முழுமையாக தெரிந்த நபர் யார் என்றால் சரசம்மாளுக்குதான் தெரியும்., கந்தசாமிக்கு தெரியும் ஆனால் அவரால் கோர்ட்டுக்கு வர முடியாது. சரசம்மாளை அழைத்தால் அவர் வந்து சாட்சி சொல்வாரா என்றால் சொல்வார். எனக்கு சொத்து உள்ளதாக சொல்லி உள்ளார்கள். அதைத்தவிர சொத்து குறித்த எந்த விபரமும் எனக்கு தெரியாது. சரசம்மாளை கேட்டால்தான் தெரியும்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/- பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.